எம்.சி.ஓ.பி எண்: 5170/2025 தேதி: 10.08.2026

மசா. : 1

பெயர் : மகாலட்சுமி

க /பெ. : சிவராஜ்

வயது : 27

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 20 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 9,10,11,,13 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். விபத்தை நான் பார்க்காதநிலையில் இழப்பீடு பெறுவதற்காக தவறான விவரங்களை புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனத்திற்கு அவர்தான் உரிமையாளர். அந்த வண்டிக்கு காப்பீடு உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை.மாதிரிவரைபடம், குற்ற இறுதி அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. என் கணவர் ஓவர் டெக் செய்யும்போது விபத்து ஏற்பட்டது என்றாலும் என் கணவரின் அஜாக்கிருதைதான் விபத்திற்கு காரணம் எ்னறால் சரியல்ல. என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. என் கணவர் தலைக்கவசம் அணிந்ததாக போலீஸ் ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் என் கணவர் சேர்க்கப்பட்டார். 23.03.2025 ல் என் கணவர் மருத்துவமனையில் இறந்தார். என் கணவரின் பணி நியமன கடிதம் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் மாத வருமானம் மசாஆ 8 ல் ஒவ்வொரு மாதமும் மாறி உள்ளது என்றால் சரி. அது சம்பந்தமாக சம்பளம் வழங்கிய நிறுவனத்தை விசாரித்தால்தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் பகுதிநேரத்தில் ஆட்டோ ஓட்டினார். அந்த ஆட்டோ அவர்

பெயரில்தான் உள்ளது. என் கணவர் இறந்த பின் என் பெயரில் உரிமை மாற்றம் செய்யவில்லை. என் கணவர் ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் போது பகுதி நேரத்தில் ஆட்டோ ஓட்டியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுவதின் மூலம் மாதம் ரூபாய் 25ஆயிரம் என் கணவர் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 4ம் மனுதாரர் என்னுடைய கணவரின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்றாலும் அவருக்கு இழப்பீடு கிடைக்காது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.